சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP.NO. **383 / 2022**

மனுதாரர் / எதிர்மனுதாரர் **எ.ம.சா.2**வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை - II திருமதி.A.அம்சவள்ளி அவர்களால் 44/1969 பிரிவின்படி **16.09.2025**ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | ஸ்ரீஜித் மோகன் | கிராமம் : | |
| த/பெ : | | வட்டம் : | |
| மதம் : | | தொழில்: | |
| ஜாதி : | | வயது : | |

முதல் விசாரணை

நான் இந்த மனுவின் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். எனது சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1) பாலிசி காப்பி - எ.ம.சா.ஆ.1, 2) வழக்கறிஞர் அறிவிப்பு - எ.ம.சா.ஆ.2, 3) ஒப்புதல் அட்டை - எ.ம.சா.ஆ.3, 4) ஒப்புதல் அட்டை - எ.ம.சா.ஆ.4, 5) ஒப்புதல் அட்டை - எ.ம.சா.ஆ.5 .

மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்ட TN 01 AQ 5969 என்கின்ற பதிவு எண் கொண்ட டாடா ஏசி வாகனமானது முழுமையாக காப்பீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வாகனத்திற்கு விபத்து சமயத்தில் தகுதி சான்றும், அதன் ஓட்டுநருக்கு உரிய ஓட்டுநர் உரிமமும் அமலில் இருந்தது என்று சொன்னால் சரியல்ல. மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் தகுதி சான்றும், ஓட்டுநர் உரிமமும் தாக்கல் செய்யப்படவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. முழுமையான காப்பீடு அமலில் உள்ளதால் பாதிக்கப்பட்டவர்கள் மூன்றாவது தரப்பினர்கள் என்பதால் எங்களது நிறுவனம் தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஓம்/-(ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.